கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# ஞானசதுஷ்டய தர்ப்பண வச்சிரசூசிகை.

இஃது

மதுரைத்

துரைத்தனத்தார் வித்தியாசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

சபாபதிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டுச்

சென்னைச்

சின்னையநாடாரவர்கள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விஜய௵ வைகாசி௴

1893.

தன் விலை அணா 2.

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

# ஞானசதுஷ்டயதர்ப்பண வச்சிரசூசிகை.

## காப்பு
கலிவிருத்தம்.

பொன்னு நன்மணி யும்படி யிற்பொலி
சொன்ன பங்கய வாவியின் சூழலிற்
றுன்னு தாரகத் தொல்லுரு வாயருண்
மன்னு சித்திக் களிற்றை வணங்குவாம்.

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

"வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத்துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவு

சிவாநுபூதிச்செல்வராகிய சேக்கிழார் சுவா
ற்றிய பெரியபுராணத்தில், திருஞானசம்ப
கள் புராணத்திலேயவர் ஞானம்பெற்ற
கின்ற

"சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம்
பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞான
முவமையிலாக்கலைஞான முணர்வரியமெய்ஞ்ஞானந்
தவமுதல்வர்சம்பந்தர் தாமுணர்ந்தாரங்கிலையில்"

என்னுமிச்செய்யுட்குச் சிலர் பரம் அபரமென விரண்டுஞானமே பொருளெனவுஞ் சிலர் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென நான்குஞானமே பொருளெனவுங் கொண்டு இரண்டு ஞானங்கொள்வோர்நான்கு ஞானத்தையு நான்கு ஞானங்கொள்வோரிரண்டு ஞானத்தையு மறுத்துப் பத்திரிகைகளெழுதிப் பெரியதோராரவாரஞ்செய்து ஒருவரையொருவர் விரோதித்து வாதித்தனர். ஆதலின் மேற்கூறிய செய்யுட்கு **மெய்ஞ்ஞானபானு**வென்னு மோருரையை யாவர்க்குமமையுமாறு யாமியற்றி வெளியிட்டனம். அவ்வுரையிற் சிவனடியைச் சிந்திக்கும் அருட்செல்வத்தைத்தருஞ் சிவஞானமும், பவத்தினையொழித்தற்குரிய அவன்பணி நிற்குஞானமும், ஒப்பற்ற கலைஞானமும், சுட்டுணர்விறந்த மெய்ஞ்ஞானமுமென வாற்றொழுக்காகச்சொன்னிலையாற்பெறப்படு ஞானநான்குஞ் செம்பொருளாமென வுரைத்து, ஆளுடையபிள்ளையார் சிவபெருமானது திருவடியைச் சிந்தித்துந் திருப்பதிகடோறுஞ்சென்று வழிபட்டுத் திருப்பதிகஞ்சாத்துதலாகிய வவாது பணியினின்று ...தாமலே யெக்கலைகளையு முழுதொருங்குணர்ந்து ...னுபூதிப்பெருவாழ்வுற்றும் விளங்கியமையால ...நிகழ்ந்தஞானத்தை நிகழ்ச்சிமுறைமையானி...ல்வகைப்படுத்து, அவற்றினுளிவர்கள் கூறு ...ானமும் நான்கு ஞானமுமேயன்றி வே

றெவ்வாற்றானும் வகுக்கப்படும்வகை ஞானங்களியா வுமாக்சப் பொருளாயடங்குமாறு சர்வஞ்ஞராகிய சேக்கிழார்சுவாமிகள் கூறியருளினரென விளக்கிக் காட்டினும். மேலும் பிறருரைகளிற் சொல்லாற்ற லும் பொருளாற்றலுஞ் சிதைதலாலவைகள் கொள் ளத்தக்கனவல்லவென்பதையும் பலவாற்றானுந்தெளி வுறக்காட்டினும்.

இங்ஙனமாகவுஞ் சென்னைச் சைவப்பிரசங்கியா ரொருவர் யாங்கூறிய வம் **மெய்ஞ்ஞானபானுவை** மறுத் தற்கு அதில் விஷயமல்லாத சிலகுற்றங்களைக் கற் பித்துக் கூறுதலேயன்றி யாங்கூறிய கருத்துக்கள் ஞானசாத்திரங்களோடு முரணுகின்றனவெனச் சில போலிநியாயங்களையெடுத்துக்கூறியொரு சிறு புத்தக மெழுதியதற்கு **ஞான சதுஷ்டயதர்ப்பண**மெனப்பெய ரிட்டு வெளியிட்டிருக்கின்றனர். இவரிதைக்கூறுதற் கண், அகங்காரத்தையே யொரு வடிவமாகக்கொண் டு, பிறர்நிந்தையாகிய முடியைத்தரித்து, நீண்ட பிர சங்கமாகிய முகம் பளபளக்க, அஸாமஞ்சஸம், பரி வசானம், பரியாலோசனை, சாத்ருசம், அசங்கதமுத லிய வடமொழிச்சொற்களாகிய வரிதாரப்பூச்சிட்டு, இலக்கணக்கல்வியுஞ் சாத்திரக்கல்வியுமாகிய கட்டுப் பல்லுங் கட்டுத்தாடியும் விகாரமாய்த்தோன்றியசையு மாறு பூண்டு, சற்சூத்திரரின் வேடமாகிய சட்டை யைப்புனைந்து, தருக்குரையுஞ் செருக்குரையுமாகிய விரண்டுகைகளையு நீட்டிவீசி, விபரீதவாதம் விதண் டாவாதமென்னுங்கால்களையூன்றி, அக்கால்களிற்றும், நெடுநேரநின்று பிரசங்கம்பண்ணும்படிச், சிட்டை யாகப் பாடஞ்செய்திருக்கும் பாடல்களையுமவற்றின்

விபரீதார்த்தங்களையு மடமடவென்று கம்பீரமாகக் கூறுமாரவாரமாகிய சலங்கைகள் கலகலவென்றொலிக்கப்புனைந்து, சாதாரணமாகிய சனங்களைமயக்கும் படாடோபப்பொலிவாகிய வோருன்றுகோலைக் கையிற்பிடித்துக்கொண்டு, அப்புத்தகமாகிய நடனசாலையில் விகடக்கூத்தாடுகின்றனர். ஆதலினவ்வாட்டத்தையொழித்தற்கு அவர் மேற்படியாபாச தர்ப்பணத்திற்கூறுங் குப்பைகளெல்லா முறைப்படக்கூறும் வலிய நியாயவாததத்தா லடிபட்டுப் பறந்துபோகும்படி துடைப்பதுமன்றி யவற்றிலுள்ளவவரது விபரீத ஞானமாகிய துர்வாசனை யாவர்க்கும் அவ்வாதமுகமாகப் புலப்படுமாறு காட்டுவதும் வேண்டுமென்றெமக்குத் தோன்றுகின்றது.

எமது மெய்ஞ்ஞானபானுவிற் கல்வி கேள்விகளில் வல்ல பெரியோரேயன்றி யேனையோ ரெழுதுவனவற்றை யொருபொருட்டாய்க் கொள்ளேமென யாங்கூறியிருத்தலானும், அங்ஙனமன்றியவற்றை யொருபொருட்டாய்க்கொண்டு மறுக்கப்புகின் அவர் தமக்கியல்பாயுள்ள மூர்க்கத்தன்மையான் மேலுமேலுமெழுதுவராதலி னவற்றிற்குக்கூறு மறுப்பும் வரம்பின்றி யோடுமாதலானும், எமக்கிதற் குத்தரங்கூறுதல் கருத்தேயன்று. ஆயினுமவர் தருப்பணத்தில் விபரீதமாகக் கூறுஞ் சிலவிடயங்களை யுண்மைதோன்ற விளக்கவேண்டிய தாவசியகமாதல் கருதியும், சிவகதைகளை நன்கு பிரசங்கிக்கவும் பரசமய நிராகரணஞ் செய்தற்குரியவாய பிரமாணங்கள் பலவற்றைத்திரட்டிக் கூறவுந் தக்கவாற்றலை யடைதற்குரிய புண்ணியஞ்செய்த விவர் புராணவசனங்க

ளுக்கும் ஆன்றோர் வசனங்களுக்கும் விபரீதப்பொருள் கூறுதலும் ஞானசாத்திரார்த்தங்களைப் புரட்டுதலுங் கற்றோர் பலரையுந் தமதாபாசப் புத்தகங்களில் வைதலும், சிவஞானபோதவுரை முன்பின் மாறுபடுதலி லதனைக் கற்போரையது தியங்கவிடுகின்றதென்பதும், சிவஞானசுவாமிகள் கூற்றுப்பல நூல்களுக்கும் விரோதப்பட் டொதுங்குதலா லதனைப் பிரமாணமாகச் சாதுக்கள் தேடிவருந்தாரென்பது முதலியனவாக நிந்தித்துக்கூறி வரம்புகடந்து சேறலுமுணர் மிலேச்சரோடொப்ப, வேதங் காயத்திரி முதலியவற்றைத் தாமெடுத்தோதி வருணாச்சிரம தர்மங்களைச் சிதைத்தலுமாகிய வின்னோரன்ன குற்றங்கள் அவரதுபாபவூழின் மிகுதியேயாமாயினு மவற்றையவ ரொத்துக்கொண்டு அவற்றினின்று மவரொழியுமாறு பெறிற்பெறுகவென்னு நோக்கத்தோடு அவர் குற்றங்களைக் காட்டல்கருதியும், அவரது ஞானசதுஷ்டய தர்ப்பணத்திற்கு மறுப்பாக **ஞானசதுஷ்டய தர்ப்பண வச்சிர சூசிகை**யென்னுமிதனை யாம் வெளியிடுகின்றனம்.

பிரசங்கியாரது தர்ப்பணத்தின் முதற்பதின்மூன்றுபக்கங்களிற் பெரியபுராணத்துச் "சிவனடியேசிந்திக்கு" மென்னுஞ் செய்யுளிற் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென்னு நான்குஞானமும் பெறப்பட்டிருக்கு முண்மையை, ஞானபேதவிளக்கம், ஞானபேதத்தெளிவு, ஞானபேதத்துணிவு, ஞானபேதவிளக்க நியாயரக்ஷாமணி முதலிய நூல்களாற்றும் நாட்டியவழி யபரஞான பரஞானமென விரண்டுஞானங்கொண்டோர் மதமழிதலின் வாதமுடி

வாயிற்றெனத் தமதுசமானமற்ற சாமர்த்தியம் விளங்கக்கூறுதலேயன்றி யெமது மெய்ஞ்ஞானபானுவிற் காப்புச்செய்யுள் வைப்புமுறை யசம்பிரதாயமுதலிய பலகுற்றங்களையுங் கூறுதலாம். அவையெல்லாமவர்க்கு நூலோடு நுண்ணறிவின்மையாகிய வறியாமைக்குற்றமேயாம். எவ்வாறெனின்:—

(1) இப்பிரசங்கியாருக்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென்னு நான்குமே ஞானத்தின் வகையென்பதூஉம் அபரஞானபரஞானங்களை மறுத்துக் கூறுவதூஉங் கொள்கையாம். இஃது ஞானசாதனங்களையு ஞானங்களையும் பகுத்துணராத குளறுபடையுணர்ச்சியாம். சிறிதிலக்கணமுணர்ந்தோரும், கேட்டன்முதலியன தொழிலாமெனவும், அவற்றான் ஞானநிகழ்தலினவை ஞானசாதனமாமென்வு மெளிதினுணர்வர். வேதாந்தமுதலிய நூல்களும் அபரஞானபரஞானங்களை யபரோட்சபரோட்சஞானங்களெனக்கூறிக்கேட்டன் முதலியனவாயசிரவணம்,மனனம், நிதித்தியாசனம், சமாதியென்பனவற்றை ஞானசாதனம் அல்லது ஞானோபாயமெனக் கூறும். அவ்வாறே சித்தாந்தநூல்களுங் கேட்டலையுஞ் சிந்தித்தலையுஞ் சாதனவியலினும்தெளிதலையு நிட்டையையுஞ் சாதனமாயினுமவற்றாற் பாசக்ஷயமுஞ் சிவப்பேறு மடையப்பெறுதலினவற்றைப் பயனியலினுங்கூறுவனவாம். ஆதலிற்கேட்டன்முதலியன ஞானசாதனமேயன்றி ஞானத்தின்வகையல்லவென்பது நன்குபுலப்படும். ஆயினுமிச்சாதனமுள்வழி ஞானமொருதலை யானெய்தப்படுவனவாதலிற் "கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளத்தலெனவீ

ரிரண்டாங் கிளக்கின் ஞானம்" எனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்துக்கேட்டன் முதலியனவற்றை யே ஞானமெனச் சித்தியார்முதலிய நூல்கள் கூறுவனவாம். இங்ஙனங்கூறும் ஔபசாரிக நியாயம் பற்றிக் கேட்டன் முதலியனவற்றை ஞானமெனக் கொள்ளினு மவை யாசிரியனிடத்து வழிபட்டுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடும் வைநயிகருக்கு நிகழு நிகழ்ச்சி முறைமைபற்றிய வொரு ஞானவகையே யாமேயன்றிப் பொதுவகையன்று. இந்தவகை ஞானங்கேட்டலின்மையிற் சாமுசித்தர்க்குக் கொள்ளத்தக்கதன்றாம். அவ்வாறே சிவபெருமானுண்ணின்றுணர்த்து மேலையோர்க்கும் விஞ்ஞானகலர் முதலாயினோர்க்கு மஃதெட்டுணையும் பொருந்துவதன்றாம். பிள்ளையார்க்குங் கேட்டலின்றி ஞானநிகழ்ந்தமையா லக்கேட்டலாதி ஞானத்தை யவர்க்குக் கொள்ளுத லசம்பாவிதமாம். சிவபெருமானுண்ணின்றுணர்த்த வவரெல்லா ஞானங்களையுமுணர்ந்தமையாற் கேட்டலுமதன்க ணடங்கியதாகக் கொண்டாலென்னை யெனின்:— உள்ளத்தின் கண்ணிகழு ஞான நிகழ்ச்சிக்குத் திருவருளுங் கேட்டலுங் கருவியாமாதலின் முன்னையது கருவியாங்காற்பின்னையது கருவியாய் நிற்றலின்மையின் அங்ஙனங்கொள்வது நுண்ணறிவின்மையாமென்க. யாமேற்காட்டிய நியாயங்களாற்கேட்டலாதி நான்கும் ஞானவகையாகாது ஞானசாதனமே யாமென்பதூஉம், சாதனசாத்தியத்தையொன்றாக்கிக் கூறும் ஔபசாரிக நியாயத்தா லவற்றைஞானமெனக்கொள்ளினும், அவை வைநயிகருக்கு நிகழுநிகழ்சசி முறைமையா

கிய வொரு சிறப்புவகை ஞானமே யாமென்பதூ
உம்,ஞானத்தின் பொதுமையை யுணர்த்தமாட்டாத
அந்தவகை ஞானம் ஆளுடைய பிள்ளையார்க்குக்
கொள்ளத்தக்கதன்றென்பதூஉம், நன்குவிளங்குமா
தலின், நமது பிரசங்கியாரது ஞானபேதவிளக்க
முதலியன விபரீதமாமாறு காண்க.

(2) விநாயகக்கடவுளைவணங்கு மெமது செய்யுளை
முன்னும் பெரியபுராணச்செய்யுளைப் பின்னுமாக
வைத்த வணக்கச்செய்யுள்களின் வைப்புமுறைமைய
சம்பிரதாயமாமென்கின்றார். தெய்வவணக்கங் கூறு
மிடத்து எடுத்துக்கொண்ட நூலினிது முடிதற்பொரு
ட்டு முதலில் விநாயகக்கடவுளையும் பின்னர்ச் சிவ
பெருமானையும், அதின்பின்னர் ஏனையோரையுந் தம்
மொழியாலேனும் (முன்னோர் மொழிபொருளேயன்
றியவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவமாத
லின்) முன்னோர்மொழியாலேனும் ஒருவர் வணங்கு
தலே வணக்கமுறைமையாமெனவுந் தாங்கூறுமாறு
பிறழக்கூறுதல் விமரீதமாமெனவுஞ் சிறப்புப்பற்றி
முற்கூறினர் சிறப்புப்பற்றிப் பிற்கூறினரெனப் பல
வுரையாசிரியருங்கூறுதலின் முற்கூறுதலும் பிற்கூறு
தலு முறைப்போர் கருத்தின்வகையாற் சிறப்பேயா
மெனவுங் கருதுஞ் சாம்பிரதாயத்தில் வியாபகமாத
லின்றி யானைகண்டகுருடனைப்போல வேகதேசப்ப
டுமுணர்ச்சியுடைமையா லங்ஙனங்கூறுவது முதிர்
ச்சியில்லாக் கல்விக்குற்றமாமென்க. அன்றியும் நும
து மருணூலின்பின்னர் "வாழ்கவந்தணர் வானவ
ரானினம்" என்னும் அருட்பாவைவைத்தல் முறை
யோவென வினவி வாழ்த்துக்கூறவேண்டிய முறை

யதுவாதலினஃதங்ஙனம் வைக்கப்பட்டதெனில்:—வணக்கங்கூறுமுறையிதுவாதலின் இஃதிங்ஙனம் வைக்கப்பட்டதென வுணராமதி யென்னமதியோவென விடுக்க.

(3) "சிவனடியேயென்னு மருட் சேக்கிழார் செய்யுள்" என்பதில் மருள் தலையெடுக்கின்றதென்னு மவர்கூற்று அருளுடையார்க்கருளு மருளுடையார்க்கு மருளு முளைத்துத்தோன்றுதலின் "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்னுஞ் சிவபெருமானது திருவாக்கினும், அல், கரியவனெனப்பிரித்து இருட்டைத்தருதற்குக்காரணமாகிய கரியவனெனப் பொருள்கொள்ளுங் கடைப்பட்ட மருட்சியுடையவர் போல வவர்க்குண்டாகிய மருண்மிகுதிக் குற்றமாமென்க. அன்றியுமிதுமுதற் சீரன்றுதலி னிங்ஙனமாராய்தல் கல்வி யிலேசமுமில்லோ ரியல்பாமென்க.

(4) வகையுளியமைதல் தோஷமென்பது அவ்வகை யுளியமைந்த வான்றோர்செய்யுள் பலவுளவென அவர்தாமே கூறுதலி னஃதான்றோ ரமைக்குமிலக்கணமேயன்றி வழுவன்றெனத் தமது கூற்றானே கொள்ளக்கிடக்குமென் றுணராப்பேதைமைக் குற்றமாமென்க. அன்றியுமிக்கவி வகையுளிகொண்டு அலக்கிடத்தக்கதன்று என்பதனை யவர் கற்றோர் வாய்க்கேட் டமைவாராக.

(5) அத்தியென்னுமொழி மலையென்னும் பொருள் படுவது யாண்டுமில்லையென்பது, அரியநூல்களினு நிகண்டுகளினு மவர்க்குணர்ச்சியில்லாவிடினுந் தாம் வழக்கமாய்ப்பார்க்கு மகராதியின் அநுபந்தத்திலா

வது அப்பொருளுண்மை யுணராது துணிந்துகூறு தல் கேவலமறியாமைக் குற்றமாமென்க.

(6) "விளக்கமென்னு மொழிக்கு யாம்விளக்கு அல்லது தீபம்எனப் பொருள்கொண்டது தவறு; அது ஒளியல்லது பிரகாசமெனப் பொருள்பட்டுச் சூரியன் முதலியவற்றி னொளியினைப் பொதுமையிற் குறித்துநிற்கும்" எனக் கரைகின்றனர். அவரிவ்வா றே சொற்குணமுணராது தமக்குத் தோன்றியவா றே பொருள்கூறுவது அவரது விபரீதக்கொள்கை யாம். அதுவிளக்கச் சூருவளியென்னுந் தொடரிற் சூருவளிக்கு விடயமாவது விளக்கேயன்றி யொளி யன்றாதலின் நூற்பெயராகிய விளக்கந் தீபமேயெ னப் பொருள்படுமென்பதையும், அங்ஙனமே விளக் கந் தீபமென்னுந் தென்மொழி வடமொழிகளை யான் றோர் வேற்றுமையின்றி நூற்பெயராக வழங்குவரொன் பதையு முணராமையானும் விளக்கமென்பதில் அம் விகுதி வினைமுதற்பொருளை யுணர்த்தலாலது விளக் குவது அல்லது விளக்கத்தைச் செய்வதுஎனப் பொ ருட்பெயராய் நிற்பதேயன்றித் தாங்கொள்ளுமாறு பண்புப்பெயராய் நிற்பதன்றெனவும், அப்பண்புப் பெயர் நூலென்னும் பொருட்குப்பெயராதலேலாதெ னவு முணருமிலக்கண வுணர்ச்சியின்மையானுந் தம துபொருளை யமைத்து நோக்கி ஞானபேதத்தினொளி யென்புழி ஞானத்திற் கொளியேயன்றிப் பேதத்திற் கொளியேதென்றுணரு நுண்ணறி வின்மையானும், அன்றியு ஞானபேதத்தி னொளியென்பதி லிரண்டும் பண்புப்பெயராய்க் குணத்திற்குக் குணமுடைமை பெறப்படுதலினது குற்றமாமென்னுந் தருக்கநூலு

ணர்ச்சி யின்மையானுமுண்டாகிய வவரது அறியாமைக்குற்றமாம். இதனை லிவரெழுதிய ஞானபேதவிளக்கமென்னு நூற்பெயரினும் விளக்கமென்பதனை யிவரின்னதென வுணராரென்பதை யீண்டுக்காட்டினும். பின்னே யிவரது ஞானவிசாரத்தின் ஞானபேதமு மிவரின்னதென வுணராமை காட்டுதூஉம்.

(7) எமது முகவுரையி லெம்மா லிவ்வுரை செய்யப்பட்டதென முற்கூறியதைச் சுட்டி "இங்ஙனம் (இவ்வாறு) மெய்ப்பொருள் கூறுதலானு" மென யாங்கூறியதனு லஃதினிக் கூறப்போகுமதனைக் கூறிவிட்டதுபோலப் பொருண்மயக்கமுண்டாமாறுகூறியதாமென வவர் மயங்கிக் கரைவது, கூறுதலென்னு மொழியிடை நிலையேலாத் தொழிற்பெயராய் முன்னே கூறியதனையும் பின்னே கூறுவதனையு முணர்த்துமியல்பிற்றெனச் சிறுவர்களு முணருஞ்சொல்லிலக்கணமு மவருணராமையா லவர் கூறுமாறு அஃதிளங்கல்வியின் பயனேயாமென்க.

(8) "இதுவோ அதுவோ பொருளென்னு மயக்கவிருளை யொழித்தலானு" மெனயாங்கூறியது பொருந்தாதெனவும், "இதுவோவென்னும் ஞானபேத விளக்க ஞானத்தையு மதுவோவென்னு ஞானசூடாமணி ஞானத்தையுந்தள்ளி யெதுவோ வொன்றாய விருண்ஞானத்தை இவரெடுத்திசைத்தது எவருங் கேட்காத இழிஞானம்" எனவுந் தமக்கிழிவே வடிவமென்பது தோன்றக்கூறுகின்றார். வழிச்செல்வோன்றனக்குக் காணப்பட்ட விரண்டு வழியைப்பார்த்து அவ்வூர்க்குச்செல்லும்வழி யிதுவோ வதுவோ

வென மயங்குமிடத்து அவனுண்மைவழியைக்காணு னயினதனைத் தெரிந்தோனவ் விரண்டும் வழியல்ல, இதுவேவழியென்று அவ்வுண்மைவழியைக் காட்டு ங்கால், அது தவறு அவன் மயங்கிய வவ்விரண்டு வழிகளி லொன்றையே காட்டுதல் வேண்டுமெனக் கூறும் பேதைபோல, அவ்விருவகைஞானமும்பொ ருளல்ல, யாங்கூறுஞானமே பொருளென்னுமிடத் து, அதனைத்தவறென்று காட்டுதற்கு இலக்கணநு ட்பமுணர்ந்தவர்போலக் குற்றியோ மகனோ வென் னு முதாரணங்காட்டிப் பயனில்லனவற்றைக் கூறு தல் குற்றியறிவினை யுடைய வொரு மூழுமகன் கூற் றுப் போலுங் குற்றமாமென்க.

(9) "இரண்டு சிறந்த புலவர்க ளெழுதப்பட்ட ஞானபேதவிளக்கம் ஞானசூடாமணி" யென்னும் வாக்கியம் பிழையெனவும் அது புலவர்களெழுதிய வென்றுதல் புலவர்களா லெழுதப்பட்டவென்றுத லிருத்தல் வேண்டுமெனவுங் கூறுகின்றனர். இஃது வடமொழிநியாயம். இவர் தமிழ்நடையு மிலக்கண மும் பயின்றவரல்லர். தமிழிற் "புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்" என நன்னூற்சூத்திரவமைதி பெற்றும் பிரயோக விவேகவமைதிபெற்றும் வருகிற "பேய் பிடிக்கப்பட்டான்" "புலி கடிக்கப்பட்டான்" "யாஞ்செய்யப்பட்டகாரியம்" என்ற தொடர்களினி லக்கணத்தைச் சற்றுச் சிந்தித்தடங்குவாராக. அன் றியுந் தோலாமொழித்தேவர்தஞ் சூளாமணியு ணகு ரப்படலத்துக்கூறிய முதற்கவியாகிய

"சொன்னநீர் வளமைத்தாய சுரமைநாட் டகணிசார்ந்து
மன்னன்வீற் றிருந்துவைக நூலவர் வகுக்கப்பட்ட

பொன்னவிர்புரிசைவேலிப்போதனமென்பதுண்டோ
நன்னகர் நாகலோக நகுவதொத் தினியதொன்றே" [ர்

என்ற செய்யுளின்கண் ணிவ்வமைதியை நோக்கி, அந்தோ! என்செய்வேம் ஈண்டுந் தொலைவுண்டேமேயென்று அமங்கலப்பேதையென வழுதுகொண்டும் வாயிலுமார்பிலும் புடைத்துக்கொண்டு மொழியக்கடவர். மேற்கூறி யாங்குப்பரந்து வழங்கிவருந் தொடர்களுட் படுவினைப் பிரயோக முணராது வடநூலுடையார் மொழிபெயர்க்குங் காற்கூறக்கேட்ட வழக்கமொன்றனையே விதியெனக்கொண்டு அதனைக்குற்றமெனக் கருதுதல் இலக்கணத்திலு மிலக்கியத்திலும் வியாபகவுணர்ச்சியின்றிச் சுருங்கிய வறிவுடைமையாலாகிய குற்றமாமென்க.

(10) அவர்கள், அவர் என்னுமொழிகள் எடுத்துக்கூறு என்னு மொரேவினைக்கெழுவாயாய் ஒன்று பயன்செய்யாதென்பது முன்னையசொல் "அமைக்குமாறுபோல" வென்னும் வினையோடு வேறுமுடிபேற்று நிற்குமாதலி னங்ஙன முடிபுசெய்து கொள்ளும் முடிபிலக்கணமுணராக் குற்றமென்க.

(11) செல்வர் பலரிடத்துஞ் சென்றிரந்த வுயர்ந்தவாடைகளின் கிழிகளை யொன்றுகத்தைத்த கந்தைபோலப் பலநூல்களிலுமுள்ள சூத்திரங்களையும் பாக்களையு முரைகளையு மொன்றுகப் பிணைத்துக் கூறுவது மெழுதுவதுமென யாங் கந்தை யுபமானங்காட்டியவழி யுபமான வுபமேயங்களிலுள்ள பொதுத்தன்மையை மாத்திரங் கவர்ந்து ஏனையவற்றைக் கொள்ளாத அலங்காரவிலக்கண முணர்ந்த கற்றோர் போலாது வெறிக்கூற்றுக, "ஆடையின் கிழிகளைச்

செல்வர் வறியவர்க்கு வழங்குங்கால் அவ்வாடை முதலற்றுப்போகின்றது. அந்தோவிவர் பிறர்க்காடையுபகாரஞ் செய்யுஞ் செல்வர்களை நிர்வாணிகளாக்கத்தொடங்கினு ரிதென்கொலோ ? தொல்காப்பிய முதலியன பழையவாடைகளு மவற்றுட்போந்த சூத்திரமுதலியன கிழிகளுமாங்கால், தொல்காப்பிய முதலியன முதலற்றுக் கந்தைகளாய்க் கழியும். ஆடையின்றி நிர்வாணிகளாய் நின்ற அவ்வாக்கியோர்க்குப் புதியதொல்காப்பிய முதலியனபுனைந்துகொடுத்து அவர்களது மானங்காத்திடுதல் வேண்டும். ஐயோ ! பாவம் இவருக்கதிககஷ்டம் வந்ததற்காக நாம் அதிகவருத்தப்படுகிறோம்'' எனக்கூறி யுத்தண்டப் பிரசங்கஞ் செய்கின்றனர். இவரது புன்புலமையைக் கற்றோரே கண்டு களிப்பாராக.

(12) "இலக்கணமுதலிய கருவி நூல்களை நன்குணர்ந்து இலக்கிய வாராய்ச்சி நிரம்பி முதிர்ந்த'' வெனயாங்கூறுவது எங்குள்ளசம்பிரதாயமெனவும், நிகண்டுகற்று இலக்கிய வாராய்ச்சி செய்து பின்னரிலக்கணமுணர்ந்தென் றெழுதவறியாதவிவருமொருபண்டிதராக வெளிவந்தது பரிதாபமெனவும், சர்வசீவதயாபரக் கொக்காகக் கூறுகின்றனர். நிகண்டுகற்று இலக்கணநூல்களின் கடினவுரை முதலியனவற்றை யுணருமாறு சிறிதிலக்கியம்பயின்று பின்னரிலக்கணம் பயிலுகவென விவர் போலுமிளங் கல்விமான்களுக்குப் பெரியோர் கூறுவனவற்றையே முறையெனக்கொண்டார்போலும். கற்றோரெவர்க்கு மிலக்கணங் கருவிநூலேயாமாதலானும், எழுத்தறிந்து, "மொழித்திறத்தின், முட்டறுத்த மேலோன்முத

னூற்பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடுபெறும்" எனக்கூறுதலானும், இலக்கணம் ஞானநூன் முதலிய இலக்கியநூல்களை யுணர்தற்குக் கருவியேயாம் என்பது கொள்ளப்படும். இவர் சம்பிரதாயப்படி யிலக்கியம்படித்து இலக்கணம்படித்தலின் இலக்கியமிலக்கணத்திற்குக் கருவிநூலாயிற்று. ஆகவே இலக்கணத்திற் கிலக்கியங் கருவி, இலக்கியத்திற்கிலக்கணங்கருவி யென்றாகி யொன்றனையொன்று பற்றுதலென்னுங் குற்றமாமாதலி னிவரது சம்பிரதாயப் பிரசங்கம் அவர் கூறுமாறு பண்டிதர்கள் பரிதபிக்கத்தக்கதேயாம்.

(13) "யாகமுதலிய கன்மப்பயன்போல அநுபவமாத்திரத்தா லழியாத முத்திப்பயனை" யென யாமெழுதிய தொடர், யாகமுதலிய கன்மப்பயனு மநுபவமாத்திரத்தா லழியாததாமென வேறுபொருளும்படுமெனக்கூறி, அதனை யாகமுதலிய கன்மப்பயன்போலாது எனப் பிழைபடத் திருத்தி யிவ்வளவு கண்டெழுத வகையறியாத விவருக்கேனோ வீண்வாயெனவொரு மூடவினுவு நிகழ்த்துவர். இஃது நன்னூல் விருத்தியுரையில் "அவன் என்பதன்கண் அகரம், அறம் என்பதன்கண் அகரம்போலப்பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்று ஒருபொருளையுணர்த்தாது மலையன் என்பதன்கட் பகுதிபோல வேறுநின்று சுட்டுப்பொருளை யுணர்த்தலின்" எனவும், சிவஞானபோத வுரையில் "அறம்பாவமிரண்டுந் தம்மைப்போல வனுபவமாத்திரத்தாற் கெடுதலின்றி மேன்மேன் முறுகிவளர்வனவாய சரியைமுதலிய" எனவும் வருந்தொடர் முதலியன போல்வ

தாம். இத்தொடர்களினும், அறம் என்பதன்கண் அகரம் போலாதெனவுந் தம்மைப்போலாதெனவு மிவர் திருத்துவராயி னிவரெவற்றையுங் கண்டெழுத வகையறிந்தமைக்குக் கற்ருேர் மிகுதியுமகிழ்வர். 'அவர்போல விவர் நல்லரல்லர்' என்னுமொழி நவாக்கியத்திற்கு அவர்நல்லர், இவர் நல்லரல்லர் என்பது பொருளாமேயன்றி யவரும் நல்லரல்லர் இவரும் நல்லரல்லர் என்பது பொருளாகாது. அப்பொருள் படுதற்கு அவர்போலவே யிவரும் நல்லரல்லர் என வுவமவுருபின்மேற் றேற்றேகாரத்தையும் பொருளில் எச்ச வும்மையையுங் கொடுத்துக் கூறுதல் வேண்டும், அவ்விரண்டனு ளொன்றைத் தொகையாக்கி யவர்போலவே விவர் நல்லரல்லர், அவர்போல விவரும் நல்லரல்லரெனக்கூறுதலுமுண்டு. இப்பேதமுணரமாட்டாத நமது வகையறிந்த பிரசங்கியார் அதற்கிருபொருளும் படுமெனக்கருதிப் பின்னையபொருளை நீக்குவதற்கு அவர்போலாதிவர் நல்லரல்லரெனத் தமிழ்நடையல்லாதவோராபாச வாக்கியத்தைத் தாமேயாக்கிக்கூறுவர். அன்றியும் பசுக்கள்போலப் பந்தமுருத சிவமெனவும் இவண் முகம்போல வழகில்லாத மதியெனவுங் கூறுந்தொடர்களைப் பசுக்கள்போலாது பந்தமுருத சிவமெனவும்,இவண் முகம்போலாது அழகில்லாத மதியெனவுந்திருத்திக் கூறவும் வருவர். அந்தோ! அறியாமையே யிவர்க்குப் புலமையாகப் பரிணமித்துப் பலருமயங்குமாறு தோன்றுவது மிகவு மாச்சரியம். "பதிதரும் புறச்சமயிகளும் போலச் சற்சூத்திரர் தமக்கதிகாரமில்லாத வேதமோதுதலைச் செய்யார்"

எனவும், "பதிதரும் புறச்சமயிகளும் போலாது சற்சூத்திரர் வருணாச்சிரம தருமத்திற்குரிய வொழுக்கங்களைப் பாதுகாப்பவராவர்" எனவுங் கூறும்வாக்கிய முதலியவற்றிற் பொதுத்தன்மையை யுணர்த்துஞ்சொல் லுள்வழியு மில்வழியு முறையே வழங்கிவரும்போல, போலாது என்னு மொழிகளின் உபயோகத்தை யிவர் கற்றோர் மாட்டு நன்குணர்ந்து இனியவற்றைத் தமது பிரசங்கத்தில் வழுவின்றி யுபயோகிப்பாராக.

இதுகாறும் யாங்கூறியவற்றா லெமது மெய்ஞ்ஞானபானுவி லவர் கூறிய குற்றங்களெல்லா மவரதறியாமைக் கூற்றெனக் காட்டினும். அவ்வறியாமைக்கண்ணும் ஆங்காங்குக் கூறுமவரதகங்காரக் கூற்றைக்கண்டு கற்றோர்களே யிவரிவ்வகை யியல்பினரெனத் துணிதல்வேண்டும்.

இனி யிவரது தர்ப்பணத்தின் 14-வது பக்கமுதல் 30 - வது பக்கம்வரையுள்ள 17 பக்கங்களில் ஞானவிவரணமெனத் தோற்றுவாய்செய்து நான்குஞானங்களைச் சம்பந்த ருணர்ந்தாரென்று சேக்கிழார்சுவாமிகள் பிரகாசப்படுத்தின ரென்பதூஉம், பிள்ளையார் பேரருட்டிறமீதென்பதூஉம், அவருலகமுய்ய வந்தவரென்பதூஉம், அவர் பிறந்திறவாதவ ரென்பதூஉம், அவர் சிவகுமாரரென்பதூஉம், அவர் மயிலேறும் பெருமாளென்பதூஉமாகிய விவற்றினை விஸ்தரிக்கின்றனர். இது கேட்போர்க்குக் காலம் நீட்டிக்கும்வண்ணம் பலவற்றையும் விரித்துக்கூறுங்கடை வீதிப்பிரசங்கமே யொழிய வாதத்தாலுண்மையை நிச்சயிக்கத்தக்க விஷயமன்றுமாதலினிவற்

றைத் தெளிவுபெற விரண்டுமூன்று பக்கங்களிற் சுருங்கக்கூறுது 17 பக்கத்திற்கூறுதன் மிகைபடக் கூறுதலென்னுங் குற்றமாம். அங்ஙனஞ் சுருங்கக் கூறுவதூஉம், பிள்ளையார் பேரருளுடைய ரென்பதூஉம்,உலகமுய்யவந்தவ ரென்பதூஉம், முருகக்கடவுளே யாமென்பதூஉம் முதலியனவாக அவர் கூறுவனவெல்லா மெமக் குடன்பாடே யாமாதலின் எமது கொள்கையையே கூறுதலிற் பயனில கூறுதலென்னுங் குற்றமாமாதலினிவற்றிற் கியாமொன்றுங் கூறவேண்டுவதில்லை. அற்றேன் மெய்ஞ்ஞானபானுவிற் பிள்ளையாரைச் சாமுசித்தரென்பது இங்கேயவர் முருகக்கடவுளாமென்பதனோடு மாறுபடாதோவெனின்:—அவதாரத்தோற்றம் பற்றிக்கூறுதலிற்படாதென்க. மானுடத்தோற்றமுடையோரெல்லாம், சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என மூவகைப் படுவரென்று நூல்கள் கூறுவனவாம். அவருட் சாமுசித்தர் நூலின்றியும் வைநயிகர் ஆசிரியன்மாட்டுக்கேட்கப்படும் நூன்முகமாயும் ஞானத்தைப்பெறுவோராவர். பிராகிருதர் ஒருவாற்றானும் ஞானம் பெறமாட்டாத அபக்குவர். பிள்ளையார் அவதாரத்தால் மானுடத்தோற்றமாகிய தொகையுட் படுதலான்வகையுள்ளும் படவேண்டுதலிற் சாமுசித்தரெனக் கூறியதே யாமன்றி வேறன்று. மானுடத்தோற்றமும் பிராமணசாதியுங் கௌணிய கோத்திரமும், ஞானப்பேறும் அவர்க்குக்கூறுதல்போலவே சாமுசித்தராந் தன்மையுங் கூறுமிடத்து அத்தோற்றஞ் சாதிமுதலாயின மாறுபடாதெனக் கொள்வார்க்கு இதுமாத்திர மாறுபடுமென்பதுஎவ்வாறெனவிடுக்க.

அன்றியும் பிள்ளையார்முற்றவமுடையாரென்னுங் கருத்துச் சிவாநுபூதிச்செல்வராயுள்ள பெரியோர் களுடைய திருவாக்குகளிற் காணப்படின் அது அவ தாரத்தோற்றம்பற்றியுங் கற்பபேத முதலியனபற்றி யுங் கூறியதெனா யாதேனுமோர்வகையாலமைத்துக் கொள்ளுதலே யறிவுடையோர்க்கு முறைமையாம். அங்ஙனமமைத்துக்கொள்ளமாட்டாது அவர்களுக்கு நிந்தையுண்டாமாறு கூறுவோர் பெரியோரிடத்து மெய்யன்பு பூண்டொழுகுஞ் சைவராவரோ? திரு ஞானசம்பந்தசுவாமிகள் புராணத்திலே "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர், மண்டு தவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருள" எனவும் "முன்னைவினைத் திருத்தொண்டு முன்னியவ ர்க் கருள்புரிவான்" எனவும் "தவமுதல்வர்" என வும் முற்றவமுடையாரென்னும் பொருள்படச் சேக் கிழார்சுவாமிகள் கூறுந்தொடர்களுக்கு மேற்கூறிய வாறே கருத்துவகையாற்றமக்கிசையுமாறு அமைதி செய்துகொள்ளுதலேயன்றி யவற்றிற்கு மனம்போ னவாறே பொருள்கூறுதல் விபரீதமாய்ப் பெரும் பாவத்திற்குக்காரணமாம். அன்றியு மவ்வுரைகளை யங்கீகரிப்போர் எவ்வகைக்கல்வியுடையரோ? அறி யேம். இலக்கணவிலக்கியக்கடலாயும், ஞானசாத் திரங்களை முழுதொருங்குணர்ந்தோராயும், சிவஞான போதமகாபாஷ்யகருத்தாவாயும், அநுபூதிச் செல் வராயும் விளங்கிய சிவஞானசுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையிற் பிள்ளையார் முற்றவமுடையா ரென்னுங்கருத்துப்படக் கூறும் வாக்கியத்திற்கும், அம்மை காஞ்சிமுதலிய தலங்களிற்றவஞ்செய்தது போல முருகக்கடவுளும் பலவிடங்களிற் பூசித்துத்

தவஞ்செய்துள்ளாராதலினதுபற்றி யங்ஙனங்கூறினு ரென ஒருவாறமைதிசெய்துகொள்ளலாம். அவ்வா றன்றி யது பலநூல்களுக்கும் விரோதப்பட்டொது ங்குமெனவும், அதனைப் பிரமாணமாகக்கொள்வோர் சாதுக்களல்லரெனவும் நமது பிரசங்கியார்கூறுவது மிகவுமபசாரமாம். அதனை யுண்மையான பக்தி யுடையோர் கேட்பதும் பாவமாம். யாம் பின்னே காட்டுமாறு மேற்படி சுவாமிகள்செய்த சூத்திரக் கருத்துரைகளையுமுள்ளவாறுணரமாட்டாதவிவரிவ் வாறதிக்கிரமித்துக்கூறுதலிவரது பாபவூழின் மிகுதி யேயாம்.

இனி மேற்படி தர்ப்பணத்தின் 30-வது பக்கமுதல் இறுதிவரை நமது பிரசங்கியார் ஞானவிசாரஞ் செய்வான்றொடங்கி ஞானநூல்களின்மெய்யுணர்ச்சி தமக்கின்மையாற் சிவஞானபோதம், சிவஞானசித்தி யார் இவற்றின் சூத்திரங்கட்கும் அவற்றினுரைகட் குந் தம்மனம்போனபடியே மாறுபடப் பொருள் கூறும் ஞானக்குளறுபடையைக்காட்டுவதாம்.

இதிலே முதலிற் பரஞான வபரஞானங்கள் தாங் கூறினவல்லவென மறுத்துக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்,நிட்டையென்னும் நான்குமே தமது கொ ள்கையென நாட்டுகின்றனர். கேட்டன் முதலியன அவ்விருவகை ஞானங்களின் வகையாயடங்குமாத லின், அவற்றை மறுக்குங் கால்வகையைக்கொண்டு தொகையை மறுத்ததாமாகவே யிவர் தொகைவகை யிலக்கணங்களுந் தொகுத்தும் வகுத்துங் கூறும்பொ ருளொருமையுமுணரு மறிவினரல்லாதல்பெறப்படு ம். இது மக்கட்சாதியை நான்கெனக்கொண்டு ஆண்

பெண் எனக்கொள்ளும் இரண்டுவகையினையு மறுப்பதுபோலுமாம். அன்றியு மிவ்வதிகப் பிரசங்கியார் எமது மெய்ஞ்ஞானபானுவிற் கூறும் நான்கு ஞானங்களுந் தாந்தமது ஞானபேத விளக்கத்துட் கூறியகேட்டலாதி நான்கு ஞானங்களுமேயாமன்றி வேறல்லவெனவும், ஞானகாண்டம்பற்றி நிகழுமந்நால்வகை ஞானத்தையே பிள்ளையார் பெற்றதாகச் சேக்கிழார் சுவாமிகள் கூறியருளினரெனவு முன்னர்க் கூறிப்பின்னரதற்குமாறாய் எமது ஞானவகையுட் கன்மகாண்ட உபாசனுகாண்ட ஞானங்களதிகமாகப்பெறப்படுதலின் அவை வேறுமெனவுங்கொண்டு பிள்ளையாரை ஞானசம்பந்தரென்று கூறுவதன்றிக் கன்மசம்பந்தர் உபாசனு சம்பந்தரென்னும் வழக்கமின்மையானுந் "தாவிறணிச் சிவஞான சம்பந்த ராயினு" ரெனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுதலானு மவருக்கு ஞானசம்பந்தமேயன்றி யதனோடு வேறுசம்பந்தமுண்டாயினதாகக்கூறுதல் அசங்கதமாமாதலிற் பிளையார்க்குக் கன்மகாண்ட உபசனுகாண்ட ஞானங்களில்லையென மறுத்து இவர் தேடிய மிகைஞானங்கள் கழிந்தனவெனவுங்கூறினர்.

இதற்கும் மாறாய்க் கம்பரிராமாயணம் பாடினுரென்னுமுவமைப்பிரஸ்தாபற்றிற் பிள்ளையார் ஞானகாண்டத்தை யுணர்ந்தாரெனவே கன்மகாண்ட உபாசனுகாண்டங்களை யவருணர்ந்தது கூறாமலே யமையுமென்றார். இவரிங்ஙனம் விபரீதத்தின்மேலும் விபரீதங்கூறுதலினாலே பூர்வாபர விரோதஞ்சித்தியாயிற்று. இவரித்தகைய தமது நிபுணவாதத்தால் யாங்கூறியது ஞானிகள் கழகத்து நகையுண்டாழியுமெனப்

பிதற்றுதலோடு கேட்டலாதி ஞானங்களை யாமவரிடத்திற்கற்று வெளிவந்த மகா பண்டிதசிசுவெனவுங் கனாகின்றனர். இஃது காகத்தினிடத்து அன்னம் நடையினைக் கற்றுவருதலும், பெருந்தொனியையுடைய வொன்றினிடத்துக் குதிரைகனைத்தலைக்கற்று வெளிப்படுதலும் போல்வதாம். இவர் தம்மை யெமக்காசிரியனாகக்கூறுதலின் "மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர், கோத்திரங் கூறப்படும்" என்னு நீதிவசனத்தாலிவரதியல்பினையுள்ளவாறு புலப்படுத்துவாம். இப்பிரசங்கியார் சற்சூத்திரராய மேலான குலத்திற்குரியவரல்லர். ஊனுண்ணுமொரு தாழ்ந்த வருணத்தைச்சார்ந்தவராய்ச் சற்சூத்திரர் தீண்டுதற்கு மருகரல்லாதவர். ஆதலினிவர் விசேட நிர்வாணதீட்சை பெறுதற்குஞ் சிவபூசைசெய்தற்கும் ஞானநூல்களைப் பிறர்க் குணர்த்தற்கும் அதிகாரமுடையராவது எதனாலோ? அறியேம். தாமுபதேசிப்பதினாலும் பிறர் கேட்பதினாலுமிருவர்க்கும் பாபமேயாமன்றோ? ஆனாலியற்கையாய வைணவப்பிறப்பும் பின் விபூதிதாரணத்தாற் சைவப்பிறப்புமுற்றுச் சூத்திரவிருபிறப்பாளராயும் பின்னர் நிர்வாணதீட்சைமுதலியவற்றாற் சற்சூத்திரராய முப்பிறப்பாளராயும் வேதத்தைப்பயின்று அதனைத்தமது பிரசங்கமுகமாயோதுதலின் வேதியராய் நாற்பிறப்பாளராயும் வருணாச்சிரம தருமங்களுக்கு மேற்பட்டு ஒழுகுகின்ற தமது மேம்பாடு குறித்து எம்போலியர்க்கு முபதேசிக்கத்தக்க குருத்துவந் தமக்குண்டெனக் கருதினார்போலும்! இவரதிப்பெருமையையுயர்ந்தோருள்ளவாறு கொள்ப.

யாம் **மெய்ஞ்ஞானபானுவிற்** பிள்ளையார் நான்கு ஞானம் பெற்றனரெனவும், அவையவர்க்கு நிகழ்ச்சி முறைமையிற்கூறிய ஞானத்தின்வகையெனவும், அவற்றுளெவ்விதவகை ஞானமு மடங்குமெனவும், நன்குவிளக்கிக் கூறுதலினிங்கே புதிது கூறவேண்டுவதொன்றுமில்லை. இவர் பிள்ளையார் ஞானகாண்டத்தை யுணர்ந்தமையாலேனைய காண்டங்களையுமவர் உணர்ந்ததாயாமென்பது காரணகாரிய சம்பந்தமுணராமையாம். காரியத்தைக்குறிக்குமிடத்து இன்றியமையாதனவாகிய காரணங்கள் மாத்திரங் கொள்ளப்படுமேயன்றி "எல்லுசெட்டி லக்கை யேகலக்கை" யென்பதுபோல எவையுங்கொள்ளப்படுவனவல்ல. கம்பரிராமாயணம் பாடினாரென்னிலதற்குரிய கருவிநூல்களை யவருணர்ந்தாரெனக் கொள்ளுதலேயன்றித்தர்க்கஞ் சோதிடமுதலியவற்றையுமவர் உணர்ந்தவராவரெனக்கொள்ளுதல் தருக்கநூலுணர்ச்சியின்றாம். ஆகையாற் பிள்ளையார்க்கு ஞானகாண்ட சம்பந்தங்கூறுதலினாலேயே யின்றியமையாக் காரணமல்லாத கன்மகாண்டம் இசைநூன்முதலியனவாய வெவற்றையு முழுதொருங்குணர்ந்தமை பெறப்படுமென்பதுபோலியினும் போலி நியாயமாம்.

இவர் ஞானநூலிற்கொள்ளுமநர்த்தங்களும், அவ்வநர்த்தங்களின் பிரசங்கமுகமாய் உண்மையைப் புரட்டிக்கூறும் வசனங்களும் அவற்றுற்றுங்கூறுவதை நிர்விவாதமாய் நிலைநிறுத்திவிட்டதாக முழங்கு முழக்கமும் அறியாமைக்கியல்பாயுள்ள வகங்காரத்தோடுமாங்காங்கே தலையெடுத்து நிற்கும். இவ்வாறாகிய விவரது சாத்திரக்கல்வியின்றலையெடுப்பினை யீண்டு விவரித்துக்காட்டுதூஉம்.

எமது **மெய்ஞ்ஞானபானுவிற்** "சிவனடியே சிந்திக்கு" மென்னுஞ்செய்யுளின் முதலிரண்டடியுந் தெளிதலையுணர்த்துஞ் சிவஞானபோதப் பத்தாஞ் சூத்திரக்கருத்தென்றும். இதனைப்பிடித்துக்கொண்டு நமது நிபுணப்பிரசங்கியார் "அப்பத்தாஞ் சூத்திரந் தெளிதலை யுணர்த்தப்புகுந்ததாக விவர்க்குத் தெருட்டிய வாசிரியர்யாவரோ? தெரியவில்லை. உரையாசிரியரெவருங்கூறுதவதனை யிவரிச்சூத்திரத்தின் றலையிலேற்றியது அவ்வுரையாசிரியர் யாவரினும் தாம்பெரியரென்றெண்ணி யிறுமாந் ததின்பயனேபோலு" மென்கின்றார். இச்சூத்திரக்கருத்துமறியாத விவரிவ் வறியாமையிலேயே தமது சிறுகல்விச்செருக்காலிவ் வாறிறுமாந்துகூறுங் கூற்றினைக்கண்டு கற்றோரிவரை யெவ்வாறு கொள்ளத்தக்கதோ அவ்வாறுகொள்க.

இவ்விபரீதத்தின்மேலும் விபரீதமாவது:—மேற்கூறிய பத்தாஞ்சூத்திரத்திற்கு மெய்கண்டதேவர்தாமேயருளிய கருத்திற்குச் சிவஞானசுவாமிகள் தமதுரையுல் "ஆன்மசுத்திப் பயனாகிய பாசவிடுதியைச்செய்துகொள்ளுமாறு மேற்சிந்தனைசெய்த பொருளைத் தெளியுமாறுணர்த்து முகத்தானுணர்த்துதலிப் பத்தாஞ்சூத்திரக் கருத்தாம்" என்று கூறினர். இதன் றுற்பரியமொன்பதாஞ் சூத்திரமாகிய மேலைச்சூத்திரத்திற் சிந்தித்தபொருளைப் பத்தாஞ்சூத்திரமாகிய விதனிற் றெளிதலைச்செய்து கொள்ளுமாறுணர்த்து முகத்தால், ஆன்மசுத்திப்பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறுணர்த்துவதென்பதாம். நமதுபெருவாய்ப் பிரசங்கியாரிவ் வுரைப்பொருளறியாது மேற்படி யுரைவசனங்களைப் பிழைபடுத்தி "ஆன்மசுத்

திப்பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறு
ம், மேற்சிந்தனைசெய்த பொருளைத் தெளியுமாறும்
உணர்த்து முகத்தானுணர்த்துதலிப் பத்தாஞ்சூத்தி
ரக் கருத்து” எனத் தமதாபாச தர்ப்பணத்தின்
கட் கூறுவர். இதிலுணர்த்துமென்னும் பெயரெச்
சத்திற்குச் “செய்துகொள்ளுமாறும்” “தெளியுமா
றும் என்னுமிரண்டினையுஞ் செயப்படுபொருளாக்கி
னாராதலின் பின்னுள்ள உணர்த்துதல்” எதனையென
க்கேட்போர்க்கு இதனையெனச் சொல்லவகை யறிவ
ரோ? அப்போதிவர் செயப்படுபொருள் காணமாட்
டாது விழிக்கும் விழிக்குத்திக்குகள் போதுவனவல்
லவே! இதனு லிவர்க்கு ஞானநூற்பொருளறியுமாற்
றலு மிலக்கண வுணர்ச்சியு மில்லை யென்பது நன்கு
விளங்கும். இக்குளறுபடையின்மே லவர் செய்யும்
பிரசங்கத்தில் “ஆண்டுப்போந்த தெளிதலென்னுஞ்
சொல்லை யிவர் தேடி யெடுத்துக்கொண்டு வெளிவந்
திருக்கலாம். அத்தெளிதல் கேட்டலாதிகளிற் சேர்
ந்த தெளிதலன்றும்” என்கிறார். அத்தெளித லின்
னதென வவராற் கூறுதற்கிடமின்மையின், அது அவ
ரதறியாமையை யாவர்க்குந் தெளிவிக்குந் தெளிவே
யாமன்றி வேறன்றென்பதேயாம். இன்னுமிவர் “இப்
பத்தாஞ்சூத்திரந் தெளிதன் ஞானத்தை யுணர்த்து
மாயின் இதற்கு முன்னர்க்கேட்டல் சிந்தித்தல்களை
யுணர்த்துஞ் சூத்திரங்கள் யாவை? இனி நிட்டை
யை யுணர்த்துஞ்சூத்திரம் யாது?” என வினவுகின்
றனர். இதனுலிவர் எட்டாஞ் சூத்திரங் கேட்டலையு
மொன்பதாஞ்சூத்திரஞ் சிந்தித்தலையும் பதினோராஞ்
சூத்திரம் நிட்டையையு முணர்த்துவன வென்னுங்
கருத்துமறியா ரென்பதூஉம் பெறப்படும்.

இதுவுமன்றி யிவர் "கேட்டலாதி ஞானங்களை யெட்டாஞ் சூத்திரத்தினவாகச் சிவஞான சித்தியாரில் அருணந்திசிவம் விதந்தோதியது" எனவும், "இங்ஙனமாக விவரப் பத்தாஞ் சூத்திரத்திற் றெளிதலைத் தேடியெடுத்தது இவரது தெளிவிருந்தபடியேயாம்" எனவும், பின்னுமோரிடத்தில் "அவ்வெட்டாஞ் சூத்திரத்தின் பாலனவாயகேட்டலாதி நான்கு ஞானங்களையே யாதரித்தின்புறுவதன்றிப் பத்தாஞ்சூத்திரத்தைத் தடவிப்பார்த்துக்கொண்டு (சாதுக்கள்) பரிபவமுறார்" எனவுங்கரைகுவர். ஆதலினிவர் சாதனவியலில் எஞ்சி நின்ற சூத்திரத்தினும், பயனியலினுங் கூறப்படுவனவற்றை யெல்லா மிவ்வெட்டாஞ் சூத்திரத்திலேயே யமைந்தனவாகக் கோடலி னென்பது முதலிய சூத்திரங்களெவற்றை யுணர்த்துவன வென்று கருதினரோவன்றே? அறியேம். இவரது சாத்திரக்கல்வி தெய்வத்திற்கே வெளிச்சம். கேட்டலின் கணாசிரியனு லுணர்த்தப்படும் பொருளை யன்றி யதனைச் சிந்தித்தலுஞ் சிந்தித்ததனைத் தெளிதலுந் தெளிந்ததனை யவ்வாறே நிட்டை கூடுதலுமாகிய விவற்றி னியல்பெல்லாந் தோற்றுவாய் செய்யுமாறு முன்னர்ப் பொதுவகையாற் கூறிப் பின்னர்ச் சிறப்பு வகையானும் விளக்கப்படும். இதனை மேற்படி யெட்டாஞ்சூத்திரம் 35-வது கவியுரையில் "ஞான வதிகாரப் பட்டமைபற்றி மீண்டுக் கேட்டலுடன் வைத்து ஒருவாற்றாற்றெடுத்தோதிய வின்றோ ரன்னவை யெல்லாம் வருகின்ற சூத்திரங்களான் விரித்துக்கூறப்படும்" என்பதனானுமுணர்க. இவரிம்முறைமை சிறிது முணர்ந்தவ ரல்லராதலிற் சித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் கேட்டலாதி நான்கினையு மெட்

டாஞ்சூத்திரத்திலேயே கூறியிருப்பதாகத் தமதறியாமையோடு கூடிய விபரீதத்திற் காதரவாகக் "கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" என்னுங்கவியைக் கூறுகின்றனர். இதனு லவர் கேட்டலையு மதன் கண்ணிகழ்வனவற்றையுஞ் சிறிது முணராமை யாவர்க்குமினிது விளங்குமாறு காட்டினும்.

இன்னு மிவர் சிவஞானசுவாமிகள் கருத்துரையிலிருந்து குளறுபடையாய்ப் பிழைபடவெழுதிக்கொண்ட "பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறும், தெளியுமாறும்" என்பதனை வைத்துக்கொண்டு, பொழிப்புரையில் "அவ்விறைபணி வழுவாது நிற்பின் ஆணவமலமு மாயாமலமு மாகிய வவ்விரண்டினேடு கன்மமலமு மில்லையாயொழியும்" என்பதனை யதனேடு சேர்த்து ஒப்பிட்டுத் தமது சமானமற்ற நுட்பமதியாலாராய்ந்து, பொழிப்புரையில் இறைவனேடொற்றுமைப்பட்டு அவ்விறைபணிநிற்றலை முன்னும் மலமாயாதி நிவிர்த்தியைப் பின்னுங் கூறி யிருக்கின்றது; மேற் சிற்றுரையிற்காட்டிய வாதரவிலோ பாசவிடுதி முன்னுந்தெளியு முணர்வு பின்னுங் கேட்கப்படுகின்றன; இவையொன்றேடொன்று விரோதித்தலாலிவர் தேடிய வாதரவு இவரைத்தியங்கவிட்டதென்று கூறுகின்றனர். இதில் "ஒன்றேடொன்று விரோதித்தலால்" என மகாபாஷியஞ்செய்த அச்சுவாமிகள் கருத்துரையும் பொழிப்புரையும் விரோதிக்குமாறு தவறுபுரை யியற்றியிருக்கின்றனர் எனப்பொருள்படுமாறு இவர் சுட்டிக் கூறுவதற்கேதுவாய் நின்றதொடர்கள் கல்வி யறிவு சிறிது மில்லாத விவ்வறிய பிரசங்கியாரையே தியங்க விடுவதாம். "சித்தசுத்தியுண்டாமாறு

புண்ணியஞ்செய்வர்" எனவும், "புண்ணியஞ்செய்யிற் சித்தசுத்தியுண்டாம்" எனவுங் கூறும் வாக்கியங்களிற் சித்தசுத்தியுண்டாதல் முன்னும்பின்னுங்கேட்கப்படுதலால் அவை யொன்றோடொன்று விரோதிக்கின்றனவெனக் கூறும் பேதையாருலகத் துண்டாயின் அப்பேதையா ரெவர்க்கும் நமது பிரசங்கியார் மூத்த தமையனாராவரென்க. இன்னு மிவரது பிரசங்கம் வரம்பின்றி யோடுகின்றது.

"அப்பத்தாஞ் சூத்திரமான்ம சுத்திப்பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறும் மேற்சிந்தனை செய்த பொருளைத் தெளியுமாறும் உணர்த்துவதென்று தெரிவிக்கிறது. பாசவிடுதியுந் தெளியுமுணர்வும் வேறு வேறென்றுரைத்த சிற்றுரையோடு, அவற்றை யொரேவிடயமென வுரைக்குமிவரது போதம்பிணங்குதலா லிவரதுமதம் மணமழிந்ததெனலேயமையும். இவ்வாறவதிப்படுத்தற் பாலதாய விவரது அபசித்தாந்தங் கழியவே பாசக்ஷயம்பண்ணுமா றுணர்த்துதலென்னுங் கருத்தே முடிவென்றறிக" எனக்கூறித் தம்மை முற்றுமுணர்ந்தவராகக் காட்டுகின்றனர். யாம் மேற்கூறியவாறே யிவரெடுத்துக் கூறுமிவ்வாக்கியங்களே பிழையாம். அன்றியுமிவர்க்குத்தெளிதலும் பாசக்ஷயமுங் காரணகாரியமாய வொரேவிடயமாமெனவறியு நுண்ணறிவுமில்லை, இவற்றினை நல்லாசிரியர் மாட்டுக்கேட்டுண்மை யுணரும்புண்ணியமுமில்லை யாதலினிவர் மனம்போனவாறெல்லாங் கூறுவர். பாசக்ஷயம்பண்ணுமாறென்றதனாற் பாசக்ஷயத்தையுந் தெளிதலையுணர்த்து முகத்தாலென்றதனாற் றெளிதலையுஞ், சித்

தியாரிற்பாயிரக் கவியிலேஞுகி நிற்றல்கூறும் பத்தாஞ் சூத்திரப்பொருளுமென் றமையாலேகஞுகி நிற்றலேயு மிச்சூத்திரத்திற்குக் கருத்தாக வுரையாசிரியர் பலருங்கூறுவர். இவ்வாறு வெவ்வேறுகருத்துக் கூறுவதெற்றுக்கெனில்:-முகவுரை, பதிகமுதலிய வெவ்வேறுபெயராற் பாயிரத்தி னியல்பினையெல்லாம் விளக்குவதுபோல, இவ்வாறு வேறுவேறாய்க்கூறுங் கருத்துக்களாற்றெளிதலில் நிகழுமியல்பினை யெல்லாமுணர்த்துதல் கருதியென்க. இங்ஙன மொவ்வோரிடத்து ஒவ்வோர்வகையாகக் கூறுங்கருத்துக்களின் நுட்பமு மவற்றின்பொருளியைபுஞ் சிறிதுமறியாத விவர் முற்றுமுணர்ந்த சித்தாந்தப் பிரவர்த்தகராய்த் தலையெடுத்து நிற்பதுங்கற்றோரைப் பிறழ்ச்சியுணர்வுகொண்டு நிந்திப்பதும் மிகவும் வியக்கத்தக்கதேயாம். இதுகாறுங்கூறியவற்றாலிவர் தெளிதலின்னதென வுணராமையை நன்குவிளக்கினும். ஒன்பதாஞ்சூத்திரஞ் சிந்தித்தலையும் பதினோராஞ்சூத்திரம் நிட்டையையு முணர்த்துவதெனவவருணராமையாற் சிந்தித்தல் நிட்டையாகிய விவற்றினியல்பு முணர்ந்தவரல்ல ரென்பதூஉம் பெறப்படும். கேட்டலினியல்பு முணர்ந்தவரல்லரென்பது மேலே காட்டினும். ஆதலிற் கேட்டலாதி ஞானபேதங்களை யிவர் சிறிதுமுணராரென்பது தெளிவுற விளக்கப்பட்டது. இதனு லிவரேனையவகை ஞானங்களையுணரா ரென்பதூஉமினிது புலப்படும்.

இவரது அபத்ததருப்பணத்திற் கேட்டன்முதலியன வெட்டாஞ்சூத்திரத்தினவாமெனவும், ஒன்பதுமுதலிய பிந்திய மூன்றுசூத்திரங்களுஞ் சிந்தித்

தல், தெளிதல், நிட்டையாகிய விவற்றினைக் கூறுவ னவல்லவெனவுங் கூறுமிவரது விபரீதத்தைக் காட் டுமாறு இன்னுஞ் சிறிதுவிளக்குகின்றும்.

எட்டாஞ்சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்த" எனக்கூறுதல் குருவினதுபதே சத்தை யுணர்த்துகின்றது. ஆதலினது கேட்டலையு ணர்த்துவதாம். ஒன்பதாஞ்சூத்திரக் கருத்துரையில் "தம்முதல் குருவுமா யுணர்த்தக்கேட்டு அதனைச் சிந்தனைசெய் துணருமாறுணர்த்து முகத்தான்" என் றதி லச்சூத்திரஞ் சிந்தித்தலை யுணர்த்துவதெனவும், எட்டாஞ்சூத்திரங் கேட்டலை யுணர்த்துவதெனவும் பொருள்கொள்ளப்படும். பத்தாஞ்சூத்திரக் கருத்து ரையில் "மேற்சிந்தனைசெய்த பொருளைத்தெளியு மா றுணர்த்துமுகத்தான்" என்றதிலது தெளிதலை யுணர்த்துவதெனவும், ஒன்பதாஞ்சூத்திரஞ் சிந்தித் தலை யுணர்த்துவதெனவும், நன்குவிளங்கும். பதினோ ராஞ்சூத்திரக் கருத்துரையில் "ஏகனுகி யிறைபணி நிற்பார்க்கு" எனத்தொடங்கி, "நிட்டையி னியல்பு ணர்த்துதலிப் பதினோராஞ்சூத்திரக் கருத்து" என்ற தில் அது நிட்டையை யுணர்த்துவதெனவும், பத் தாஞ்சூத்திரமேகனுகி நிற்குமியல்பினையுடைய தெ ளிதலை யுணர்த்துவதெனவும், கரதலா மலகம்போல விளங்கும். மேற்கூறியவாற்றுற் கேட்டலாதி யொவ் வொன்றினையு மவ்வச்சூத்திரமே விளக்குவதன்றி யும் பின்வருஞ்சூத்திரமு மிதனையுணர்த்தியபின்ன ரிதனையுணர்த்துவதென விளக்கிக்காட்டுதலி னிச் சூத்திரக்கருத்துக்க ளெவ்வகைக் கல்வியுடையார்க் குஞ் சந்தேகவிபரீதமின்றி யினிது விளங்குவதாக வும் நமது பெரும்புலவராகிய சென்னைப் பிரசங்கி

யார்க்குமாத்திரம் விளங்காமலிருப்பது ஆச்சரியம். இக்குளறுபடையை விஷயமாக வைத்துக்கொண்டு அப்பிரசங்கியார் தமது தர்ப்பணத்தில் அநேகம் பக்கங்களை நிரப்பிச்செய்கின்ற பிரசங்கங்கள் சாதாரண சனங்களுக்கு மயக்கத்தைத் தருவனவாயினுங் கற்றோர்க்கு அருவருக்கத்தக்கனவேயன்றி வேறல்ல.

யாம் மேற்காட்டியவாறே யிவர் கேட்டலாதி ஞானபேதங்களை யுணராமையானும் விளக்கமென்னுஞ்சொற் பொருளுணராமையானு மிவர் ஞானபேதவிளக்கமென்னு மொருகுளறுபடை நூலையெழுதியது அதன் பெயர்ப்பொருளு மின்னதென வுணராமலேயாமென யாவருமுணருமாறு நன்குவிளக்கினும். குளறுபடை மேற்குளறுபடையாக விவரெழுதிய ஞானபேதத் தெளிவுமுதலியனவுங் கற்றோர் நகைக்கத்தக்கனவாம். இதனை யின்னுமாராயுங்காலது மணற் சோற்றிற்கல்லாராய்தல்போல்வதாய்ப் பயனின்றாமெனக் கருதிவிட்டொழிந்தனம்.

இனியிவர் பலபக்கங்களை நிரப்பிக் கூறுவனவெல்லாம் வீண்காலக்ஷேபமாயும் விபரீதவிளக்கமாயும் கூறியது கூறலாயுமிருத்தலின் பயன்படும் விஷயமாயுள்ளனவற்றிற்கே விளக்கங்கூறுவாம். "தாமுணர்ந்தா ரந்நிலையில்" என்னு மூலத்தினும் அத்தொடரி னுரையினுமுள்ள "அந்நிலையில்" என்பதனை விசேஷணங்களோடு விரித்து மவைகளின்றிச் சுருக்கியும் விளக்குவதற்குவேண்டிய வளவுகூறுதல் உரைப்போர் கருத்தாய்ச் சுருங்கச்சொல்ல லென்னுமழகாமாதலினதனை விபரீதமாக்கிப் பொருள்

வெவ்வேறுணர்த்தாகக் கோடல் அறிவிலோரியல் பாய்க் கற்றோர்க்கு நகைவிளைக்குமென்க.

யாமெமது மெய்ஞ்ஞானபானுவிற் கலைஞானமென்றது கலைவேண்டப்படும் ஞானமேயென்பதாம்; அது கன்மகாண்டம், உபாசனாகாண்டம், ஞானகாண்டத்திற் கேட்டல் சிந்தித்தலாகிய விவற்றினுணர்ச்சியாம்; இவை நூலின்றியே நிகழ்ந்தமையாற் பிள்ளையார்க்கு முன்னையபேறு மெனவுமுன்னை நாளலர்ந்திரவிற்குவிந்த தாமரைமலர்கள் பிற்றைநாளில் நாண்மலரிடைத் தாமே விரியுமாறுபோல அவரறிவின்கண் விரிவுற்றதெனவு முதாரணத்தால் விளக்கிக்கூறினும். அவ்வுதாரணத்திற்குப் பிரசங்கியார் நுண்ணறிவுடையார்போன்று பல குற்றங்கூறுவர். அதிற் குவிந்தமலர் பிற்றைநாளில் நாண்மலர்களிடையே விரிதலாகிய வொன்றினையே பொதுத்தன்மையாகக் கோடலினதனைவிட்டு ஏனையவற்றைக் கருதுதல் பாற்கடலுள்வாழுமீன்க ளப்பாலையிச்சியாது வேறுபலவற்றை யிச்சித்தல்போல்வதாகியும் அலங்காரவிலக்கண முணராதார் கொள்கையாகியும் மேலே கந்தையுவமானத்திற்குக் கூறியதுபோலக் குற்றமாமென்க. இன்னுமது ஒரு குருடனுக்கு ஒரு குழந்தை முக்கிற்பாலேறி யிறந்துபோயிற்றென்று கூற, அவன் பாலெப்படி யிருக்குமென்று வினவக் கொக்குப்போலென, அதுவு மெப்படியிருக்குமென, முழங்கைபோ லென்னுமிடத்து, அவனும் முழங்கையைத் தடவிப்பார்த்து இவ்வளவுபெரிது குழந்தைமூக்கிலேறுமாயி னக்குழந்தை யிறக்காமலென் செய்யுமெனக் கூறுமாறு விடயமுணராது குருட்டுத்தனமாய்த் தடவிக்கூறுங் குருட்டுஞானமுமாமென்க.

தெளிதன்ஞானத்தை யிரண்டாகப்பிரித்து இவர் பிரசங்கித்தற்கு ஆதாரமாய்நின்ற பிரமாணம்யாது? என்னு மவரது புலப்பத்திற்கு, இதன்கண் ணிசழூமி யல்பாலென யாங்கூறுவதே யமைதியாம். அதனைத் தெளிதலையுணர்த்தும் பத்தாஞ்சூத்திரத்தை யிரண்டதிகரணமாகப் பிரித்துப்பொருள் கூறும்பெரியோர் வாய்க்கேட்டு ஒடுங்குவாராக.

இப்பிரசங்கியார் கலையாற்பெறப்படும் ஞானமாகிய கேட்டல் சிந்தித்தல்களிற் சிந்தித்தலையொழித்துக் கேட்டலே கலைஞானத்திற்குப் பொருளென ஞானபேதவிளக்கத்திற்ருந்தவருய்க்கூறியதனை நாட்டுமாறு கேட்கப்படுந் தன்மையாற் சுருதியென்பது காரணப்பெயராய் வேதத்திற்குக் கொள்ளப்படுதலிற் கலைஞானத்திற்குக் கேட்டலே பொருளென்றதமைவுடைத்தெனக்கூறுவர். ஒரு பொருளின்பெயர்க்குக் காரணமாயுள்ளதே அப்பொருளாற் பெறப்படுவதெனக்கொள்வது தர்க்கமிலக்கண முதலியவற்றினுணர்ச்சியின்மையினுளதாய பேதைமையென்க. இஃது சிவபெருமானை முக்கண்ண னென்புழியவராற் பெறப்படுவது முக்கண்ணேயெனவும், ஓர் செடியை முள்ளியென்புழியதனுற் பெறப்படுவது முள்ளேயெனவுங் கூறுவதுபோலும் விபரீதமாம்.

இப்பிரசங்கியார் சிரவணம், மனனம், நிதித்தியாசனமென்னு முறைமையைவிட்டு, மனனம், நிதித்தியாசனம், சிரவணமெனக்கொண்டு, "ஞாதாவாகியதன் பக்க னிகழுஞேயமாகிய சிவத்தை ஞானத்தாலன்றியறியக்கூடாமையாலந்த ஞானபீடமாகிய சிரவணத்தை நிதித்தியாசனத்தின் பின்னர்ச் சேக்கிழார்சுவா

மிக ளமைத்தருளினர்,” எனக்கூறுவர். இஃது குள றுபடையாம். இதனைத் தம்மட்டில்விடாது சேக்கி ழார்சுவாமிகண்மீது மேற்றிக்கூறுகின்றனர்· மன னஞ்செய்த லெதனை? நிதித்தியாசனஞ் செய்தபின் சிரவண மெதன்பொருட்டு? என விறுவுவோர்க்கு இந்த ஞானசாத்திரபண்டிதர் என்னவுத்தரஞ் சொல் லுவாரோ? யாமறியேம். இன்னு மவர் அவற்றி னைப்பிள்ளையா ரொன்றின்பின்னொன்றாக வெய்தா மலோரே யவசரத்திற்றானே யெய்தினரென்னுஞ் சுதந்திரத்தைக்காட்ட அவைகளைமாற்றிக் கூறினு ரென்பதுமொன்று எனத் தமதாசாரியப் பிரபாவத் திற்றும் பிரசங்கித்திருப்பதை விவேகிகள் கவனிப் பது ஆவசியகமாமெனவுங் கூறுகின்றார். இச்சிரவ ணமுதலியன வெவ்வேறுவிடயமாயிராமல் காரண காரியமாயிருத்தலின் அவை யொன்றின்பின்னொன் றாய் நிகழ்தல்வேண்டுமே. இவர் காரணங்காரியத் திற்கு முந்தியதெனக்கூறுந் தருக்கநூலுணராமை யாலிவ்வாறு மயங்கிக்கூறுவர். இதனை விவேகிகள் கவனிப்பது ஆவசியகமாமெனவவர்கூறுவது அவர்க ளிவரைநோக்கி “எற்றே! இவர்புலமை” யென வெ ள்ளிநகையாடுதற்குப்போலும்.

நமது பிரசங்கியார் யாங் கேட்டல் சிந்தித்தல் களோடு தெளிதல் நிட்டைகளையுங் கலைஞானமெனக் கொண்டது திரிபுணர்ச்சியெனவும், அது அஸாமஞ் சஸமெனவுங்கூறுகின்றனர். ஐயோ! பாவம்! இவர் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையாகியவிவற் றை ஞானநூல்கள் கூறுமென்பதைக் கேட்டிலிரா ரோ? இந்நால்வகைஞானமும் எட்டாஞ்சூத்திரத்தி னவாக அருணந்திசிவம் விதந்தோதியதென அவர்

தாமுங்கூறுவதென்னமதியோ? நூலிற்கூறுமிந்நால் வகைஞானமும் பரஞானமெனவறியுமவ்வறிவு மிவருடையரல்லர். இவர்ஞானமெல்லாங் கடைவீதிப் பிரசங்கத்தின்பொருட்டாகப் பலவற்றையு மியைபின்றிப் பிணைத்துக்கூறுங் கந்தைஞானமேயாம். பரஞானத்தினுந் தெளிதல் நிட்டைகள் நூல்வேண்டாவாயினும், அச்சிந்தனையுணர்ச்சி சாதனமாக நிகழும் பயனுதலினவையும் நூல்காரணமாகப் பெறப்படும் ஞானங்களே யாமென்பதமைவுடைத்து. ஆதலின் ஞானகாண்டம்பற்றி நிகழும் ஞானங் கேட்டலாதி ஞானங்களென்று கூறினும். அதனுலென்னே? "அரங்கின்றிவட்டாடியற்றே நிரம்பிய, நூலின்றிக் கோட்டிகொளல்" எனவவர்கூறுவது, தாமேயதற்கிலக்கியமாதல் கருதியென்க.

எமது மெய்ஞ்ஞானபானுவில் பணிநிற்றற்குக் காரணமாகிய ஞானமெனவும், அது தெளிதலின் பாற்படும் விசேடஞானமெனவும் யாங் கூறியதை யுள்ளவாறுணர்ந்தநுவதிக்கமாட்டாது பணியிலடங்கிய ஞானமெனக்கொண்டு, பணியாவது சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆதலாற் பணியிலோர்கூறு ஞானமெனவும் யாங்கூறியவாறு தெளிதலாகிய ஞானத்திஞேர்கூறு பணியாதலின் ஞானத்திஞேர்கூறு பணியாமெனவுங்கொண்டு இவை யொன்ருேடொன்று விரோதப்பட்டழியுமென ஒன்றனையொன்று பற்றுதலென்னுங் குற்றத்தை நன்குணர்ந்தவர்போலப் புலம்புவர். பணியிலோர் கூருக விவர் கூறுஞானம், அபரஞான பரஞானமிரண்டையுமொருங்கே யுணர்த்துவதோ அல்லது அவ்விரண்டிலொன்றையே யுணர்த்துவதோவெனவும், பதிஞேராஞ் சூத்திரத்திற்கூ

றுஞ் சிவப்பேற்றிற்குரிய நிட்டையிற்பெறப்படுமநு பூதிஞானத்திற்கும் பத்தாஞ்சூத்திரத்திற்கூறும் பணியினோர் கூறாகிய இந்த ஞானத்திற்கும் வேற்றுமையாதெனவும், அநுபூதிமான்களிடத்தே சாதுக்கள் வழிபட்டுணர்வர். இவர் அதற்கியார்? இவர் கூறுவது விபரீதமென்பதனை யுபமானமுகத்தாற் காட்டுதூஉம். இலிங்கவுணர்ச்சி, வியாப்தியுணர்ச்சி யிரண்டுமனுமிதியில் நிகழும் விசேடஞானங்களென்புழி யனுமதியிலோர்கூறு ஞானமும், அளவையாகிய ஞானம் பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் என்புழி ஞானத்திலோர்கூறு அனுமானமும் ஆதலின் ஞானததிலோர்கூறு அனுமானம் அனுமானத்திலோர் கூறு ஞானமெனப்பெறப்படுமென்றும், வேள்வியிலாகுதியோர் தொழில்விசேடமென்புழி வேள்வியினோர்கூறு தொழிலெனவும், பிராமணர் அறுதொழிலில் வேள்வியொன்றும் என்புழித்தொழிலின் ஓர் கூறு வேள்வியெனவும், ஆதலிற் றொழிலினோர்கூறு வேள்வி, வேள்வியினோர்கூறு தொழிலெனவும் பெறப்படுமென்றும், அவையொன்றோடொன்று விரோதப்பட்டழியுமென்றும் மெய்யுணர்ச்சியின்றிக்கூறும் விபரிதம்போல அவர்கூற்றெல்லாம் விபரீதமாமாறு காண்க.

ஞானத்தை யபரஞானம் பரஞானமெனவிரண்டாயும், பதிஞானம் பசுஞானம் பாசஞானமென மூன்றாயும் இன்னும் பலவாறாயும் வகுத்தாளும் ஞானநூல்களின் உணர்ச்சியின்மையால், அவர் அபரஞான பரஞானமுதலிய ஞானவகைகள் தடிஞானம், மிடாஞானமுதலியவற்றோடொப்பத் தேடத்தக்கனவாமெனவும், அச்செய்யுளிற்கூறிய நால்வகை ஞானத்தாற்

பிள்ளையாரெவ்வகை ஞானத்தையும் பெற்றதாயுமா மென யாங்கூறுவது ஊரிலுள்ளகுப்பை ஞானங்களை யெல்லாங் கூடையில்வாரிவந்து கொட்டியவர்க்கியா மூட்டியுபசரித்ததாயாமெனவும் பெருங்குரல்காட்டி யழுகின்றனர். இவர்க்குச் சொந்தமானதா யிவரதா பாசநிந்தைப்புத்தகங்களிற்கூறியதாயுள்ள கேட்டலா திஞானங்களேயன்றியபரஞான பரஞானமுதலியவே லையவைகளெல்லாமிவர்க்குக் குப்பைஞானங்களுந் தடிஞானங்களுமாயின், இவரதறிவின்பெருமையைக் கற்றோர்களே கண்டு வியப்பார்களாக.

யாமிதுகாறுங் கூறியவற்றால் நமது பிரசங்கியார் கூறிய விடயமில்லாத அசம்பிரதாயமுதலிய குற்றங் களையு மவரது ஞானவிசாரத்து அவர் கூறு ஞானப் பிறழ்ச்சிகளையு முறைப்படக்கூறும் வலிய நியாயங்க ளாற் பரிகரித்தொழித்து அவரது ஞானசதுஷ்டய தர் ப்பணத்தைத் திலதர்ப்பணம்பண்ணித் தொலைத்தன மாதலான் **மெய்ஞ்ஞானபானுவிற்** சொன்னிலையாற் பெறப்படுவனவும், ஆளுடையபிள்ளையார்க்கு நிகழ்ச் சி முறைமையாற் கூறப்படுவனவுமாமென யாங்கூறு நால்வகை ஞானமே பொருளென்பது நிராட்சேபனை யாய் நாட்டப்பட்டது.

இனி நமது சென்னைப்பிரசங்கியார் ஒவ்வொருமத ம்படக் கூறியவற்றையெல்லாம் யாங் கூறிய சமாதா னத்தோடு விட்டொழிந்து அவரறியாது வழுவாகக் கூறியவற்றை யெல்லா மவர்பேரிற் குற்றமாக வீண் டுத்தொகுத்து எண்ணிட்டுக்கூறுதுமு:—

(1) எமது விநாயகக்கடவுள் வணக்கச்செய்யுளை யாம் முன்வைத்தவைப்பு முறைபற்றிக் குற்றங்கூறு வது வணக்கமுறைமை யறியாக்குற்றமாம்.

(2) அத்தியென்னு மொழிக்குத் தாம்பார்க்கு மகராகியி னனுபந்தத்திலாவது மலையென்னும் பொருளுண்மை யுணராமை கேவலமறியாமைக் குற்றமாம்.

(3) நூலென்னும் பொருட்பெயராகிய விளக்கத்திற்கு ஒளியென்னும் பண்புப்பெயராய்ப் பொருள்கூறியது பெயரிலக்கண முணராக்குற்றமாம்.

(4) "இங்ஙனம் கூறுதலானும்" என்பதற்கு அது இதனைச் சுட்டுவதென்பதும், முகவுரை கூறுமுறை யிதுவென்பது மவருணராது குற்றங்கூறுவது தனக்கென வறிவிலாக்குற்றமாம்.

(5) கந்தையுவமானம் கூறுமிடத்துப் பொதுத்தன்மையைவிட்டுச் "செல்வர்களை நிர்வாணிகளாக்கத் தொடங்கினரிதன்கொலோ?" வென்பது முதலியவற்றைக் கூறுவது அலங்காரவிலக்கண விலேசமுமறியாத வெறிக்கூற்றாகிய குற்றமாம்.

(6) இலக்கியத்திற் கிலக்கணங் கருவியாகவு மிலக்கியமே யிலக்கணத்திற்குக் கருவி யாமாறு கூறுதலொன்றனையொன்று பற்றுதலென்னுங் குற்றமாம்.

(7) முந்திரியென்பதை முந்திரையென்பது சொற்குற்றமாம்.

(8) "போல" "போலாது" என்னு மொழிகளைப் பிழையின்றி யுபயோகிக்குமா றுணர்ந்தெழுதமாட்டாமை யெழுதும்வகை யறியாக்குற்றமாம்.

(9) வழுவில்லனவற்றை வழுப்படத்திருத்துதலறியாமைக் கியல்பாயுள்ள வகங்காரமென்னுங் குற்றமாம்.

(10) அந்தணராவார் உபநயன கருமத்தாற் சூத்திரப்பிறப்பினையு மாள்பவராவரெனப் பொருள்படுமாறு விளக்கியது விளக்கவறியாக் குற்றமாம்.

(11) சிவஞானசுவாமிகள் சிற்றுரையானது நூல்கள் பலவற்றிற்கும் விரோதப்படுகின்றதென்பது கல்வியின்மையும் பெரியோரை அவமதித்தலுமாகிய குற்றமாம்.

(12) சிவஞானசுவாமிகளது வாக்கியம், கற்றுக்கேட்ட பெரியோர்களுக்குத் தலைக்கணியாய் விளங்கவும், அதனை "அது ஒதுங்குதலால்" என நிஷேதித்துக்கூறுதல் பேதைமைக்குற்றமாம்.

(13) அதனைப் பிரமாணமாகத் தேடிச் சாதுக்கள் வருந்தாரென்பது, அவ்வுரைகளை நன்குணர்ந்த சாதுக்கள் யாவரையுஞ் சாதுக்களல்லரென நிந்தித்த குற்றமாம்.

(14) அபரஞான பரஞானங்கள் தமது கொள்கையல்லவென்றது ஞானப்பகுப்பினியல்பும் தொகைவகை யிலக்கணங்களுஞ் செம்பொருளாக்கப் பொருளென்னும் பொருள்கோண் முறைமைகளு மறியாக்குற்றமாம்.

(15) "ஆன்மசுத்திப் பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறும், மேற்சிந்தனை செய்தபொருளைத் தெளியுமாறு முணர்த்துதல்" எனச் சிவஞான போதவுரையைப் பிழைபடக்கொண்டது ஞானசாஸ்திரங்களை வாசிக்கத் தெரியாமையாகிய குற்றமாம். அதற்கவர் மனம்போனவாறே பொருள்கொள்வது அநர்த்தமென்னுங் குற்றமாம்.

(16) அப்பத்தாஞ்சூத்திரந் தெளிதல் ஞானத்தை யுணர்த்தப் புகுந்ததாகத் தெருட்டியவாசிரியர் யாவரோவென்றது தெளிதலு மதனையுணர்த்துஞ் சூத்திரமுமின்னதென வுணராக்குற்றமாம்.

(17) அது தெளிதலையுணர்த்தின் அதற்குமுன்னர்க் கேட்டலையுணர்த்துஞ் சூத்திரம்யாதென்றது, கேட்டலின்னதெனவும், அதனையுணர்த்துஞ் சூத்திரந்தானுமின்னதெனவு முணராக்குற்றமாம்.

(18) "சிந்தித்தலையுணர்த்துஞ் சூத்திரம் யாது?" "நிட்டையையுணர்த்துஞ் சூத்திரம் யாது?" என்னும் வினாக்கள் சிந்தித்தல் நிட்டைகளினியல்பு மவற்றையுணர்த்துஞ் சூத்திரங்களு மின்னவென வுணராக்குற்றமாம்.

(19) கேட்டலாதி ஞானங்களை எட்டாஞ்சூத்திரத்தினவாகக் கொள்ளல் வேண்டுமென வவர் கூறுவது அவர் கேட்டன்முதலியவற்றி னியல்பைத் தாமுணர்ந்திராமையை முன்னே தனித்தனி காட்டுவதுமன்றி யிதனுலொருங்கு காட்டுவதுமாகிய குற்றமாம்.

(20) சிவஞானபோதச் சூத்திரக்கருத்துரையும் பொழிப்புரையும் விரோதிக்கின்றதென்பது வாசிக்கத் தெரியாமையும் பொருளறிய மாட்டாமையுமாகிய குற்றமாம்.

(21) "தெளியுமுணர்வும் பாசவிடுதியும் வெவ்வேறு" எனக்கொண்டது அவை காரணகாரியமாயொரேவிடயம்பற்றி வருமெனவுணரு நுண்ணறிவின்மைக்குற்றமாம்.

(22) மேற்காட்டிய வாற்றால் விளங்குமாறு அவர் கேட்டன்முதலியன வின்னதென நன்குணராமலும்

விளக்கமெனத் தமது நூலுக்குத் தாமிட்டபெயர்ப் பொருளு முணராமலுமிருந்து ஞானபேதவிளக்கத் தையு மதன்பின்னர் நான்குநூல்களையும் வெளியிடு தல் குளறுபடையென்னும் குற்றமாம்.

(23) ஏகனுகி நிற்றலையுணர்த்துவது, தெளிதலையு ணர்த்துவது, பாசவிடுதியை உணர்த்துவது என ஒவ்வோரிடத்து ஒவ்வோர்வகையாய்ப் பத்தாஞ்சூத் திரத்துக்குக் கருத்துக்கூறுமிடத்து அக்கூற்றுக்களி னொருமை யுணரமாட்டாமை சாஸ்திரக்கேள்வி சிறி துமில்லாக் குற்றமாம்.

(24) சுருதியாற் பெறப்படு ஞானமென்பதற்கு அப்பெயர்ப் பொருளானே கேட்டலென்பதே பொரு ளென்பது ஒருபொருட்குப் பெயர் கூறுதற்கட் கார ணமாவது மப்பொருளாற் பெறப்படுமெனவும் வெ வ்வேறெனக் கருதாது ஒன்றெனக் கருதுதல் வியா பகவுணர்ச்சியில்லாக் குற்றமாம்.

(25) கன்மகாண்டம், உபாசனுகாண்டம், இசை நான்முதலியன. ஞானகாண்டத்தில் வியாப்பியமெ ன்பது காரணகாரியங்களை நன்குணருமாற்றலின்மை க்குற்றமாம்.

(26) சேக்கிழார் சுவாமிகள் பிள்ளையார் ஞானகா ண்டத்தையே யுணர்ந்தாரெனக் கூறி யுள்ளாரென் பது ஓதாமன் முழுதொருங் குணர்ந்தா ரென்பத னேடு மாறுபடுதலிற் குற்றமாம்.

(27) அபரஞானவுணர்ச்சிக்கண் ஒன்றை யுணர்த லால் வேறொன்றையுணர்தல் பெறப்படாமையிற் கம்பர்முதலிய வுதாரணங்காட்டி ஞானகாண்டத்தை

புணர்தலா லேனையகாண்டங்களை முணர்ந்ததாயா மெனக் கூறுதல் விபரீதமென்னுங் குற்றமாம்.

(28) தொழிற்குக் காரணமாயுங் காரியமாயு ஞானிகழுமாதலின் சேட்டன்முதலியவற்றை ஞானமெனக்கொண்ட அவர் பணிநிற்றலையுங் காரணப்பொருட்டாய ஞானமெனக் கொள்ளாமையாகுமெயரிலக்கண முணராக்குற்றமாம்.

(29) "ஞானயோகக் கிரியை சரியை நாலுநாதன் றன்பணி" யென்றதிற் பணியென்பதன் கருத்து இன்னதென வுணராமலும் பணியானிகழுஞ் சிந்தனு ஞானத்திற்குஞ் சிந்தனாதீதமாகிய ஞானத்திற்கும் வேற்றுமையுணராமலு மவற்றையெல்லா மொன்றுபடக்குளறி வியாபகமாகிய ஞானத்தை யிறைபணியில் வியாப்பியமாக்கி ஞானத்திலோர் கூறு இறைபணி, இறைபணியிலோர்கூறு ஞானமெனத் தர்க்கித்துழல்வது குதர்க்கமென்னுங் குற்றமாம்.

(30) அபரஞானம், பரஞானம், பதிஞானமுதலியவற்றை யடாஞானமுந் தடிஞானமும் போலத்தேடத்தக்கனவெனக் கூறுவதுசாஸ்திரக்கல்வி யெட்டுணையுமில்லாத மூர்க்கர் கூற்றாகிய குற்றமாம்.

(31) தம்மதம் நாட்டிப்பிறர் மதங்களையும் வண்ணங்கற்றோர் எழுதப்புகுமிடத்து, அது பொருந்தாது, வழு,குற்றம், அறியாமைக்கூற்று என்பனமுதலியனவாகக் கூறுவதுபோலத் தாமுங் கூறி மறுத்தலே யன்றிக் குணாத்தன் முதலிய வளவற்ற நிந்தைச் சொற்களைப் புணர்த்துக் கூறுதல் கல்லாருமிழி குலத்தாருமாகத் தம்மைப் பிறர் கருதும்வண்ணஞ் செய்விக்குங் குற்றமாம்.

(32) ஊனுண்ணுங் கீழ்க்குலத்தினராயும் விசேட நிர்வாண தீட்சைபெற்றுச் சிவபூசைக்குரிய ராதலும் ஞானசாரியாராதலுமன்றி வேதத்தை வாசித்தலு மதனைப் பிரசங்கித்தலும் வருணாச்சிரம தர்மத்தை யதிக்கிரமிக்குங் குற்றமாம்.

(33) இவரொழுக்கங்கண்டு பஞ்சமர்வரைக்குமுள்ள வீனஜாதியாரெவருந் தீட்சைகள் பெற்றுச்சிவபூசை செய்யவும் வேதத்தைப் பயிலவு முரிமையுடையராய் வருவராதலினிவர் செய்கையூணர் மிலேச்சர் முதலியோர் செய்கையோ டொப்ப வருணாச்சிரமதர்மங்களை யதிக்கிரமிக்கச் செய்யுங் குற்றமுடையதாம்.

இங்ஙன மெம்மாற் காட்டப்பட்ட விம் முப்பத்துமூன்று குற்றங்களையும் நமது பிரசங்கியார் பரிகரிக்கக்கூடியவராயின் ஒவ்வொன்றையுமுறையே யெண்ணிட்டனுவதித்துத் தமது நியாயங்களைக்காட்டிக் கற்றோர் அங்கீகரிக்கும்வண்ணம் மறுப்பாராக. அவ்வாறன்றி யேதேனு மிரண்டொரு விடயங்களை யெடுத்துக் கடைவீதிப்பிரசங்கமாகப் பலபக்கங்களை நிரப்பித் தாம் பழகியவாறு புத்தகங்களை யச்சிட்டு வெளியிடுதல் எவ்வாற்றானும் பயன்படுவதன்று. தவறுள்வழியுள்ளவாறு பிறரைத் திருத்தியேனுந் தாந்திருந்தியேனு மெய்ம்மைவழி யொழுகித் திருவருள் பெற்று வாழ்வாராக.

ஞானசதுஷ்டய தர்ப்பண வச்சிரகுசிகை
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருவடி வாழ்க.